1970 செப்டம்பர் 1]

முறையில் நான்கே நாட்களில் அனுமதி வாங்கினேம். முன்னுல் சீப் செக்ரடரியாக இருந்தவர் தலைவராக இருந்து அதைப் பற்றி ஆராய்ந்து வருகிறுர். அவருடைய அறிக்கை கிடைத்த பிறகு இந்தத் தொழிற்சாலேயை உன்னதமான முறையில் தொடங்குவதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிவோடு தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

* 174 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1969-ம் ஆண்டில் தமிழகத்தில் புதிய தொழிற்சாலே களேத் துவக்க விண்ணப்பித்துக் கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை பேர்களுக்கு (லேசென்ஸ்) அனுமதி கொடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழ்நாட்டில் பெரிய அளவுத் தொழில்களே நிறுவுவதற்காக, 1951-ம் ஆண்டு தொழில்கள் (வளர்ச்சி–முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வேண்டி, 1969-ம் ஆண்டில் 97 பேர் மனுச் செய்து கொண்டுள்ளார்கள்.

(இ) 29 பேர்களுக்கு உரிமங்களும், முன்னேடி அனுமதிக் கடிதங்களும் Letters of Intent அளிக்கப்பட்டுள்ளன.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, 29 பேருக்கு போக, மீதம் பேருடைய விண்ணப்பங்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அனுமதி பெற்றவர்கள் எவ்வளவு பேர் தொழில் ஆரம்பித்து இருக்கிறுர்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 29 பேரில் எவ்வளவு பேர் தொழில் தொடங்கி இருக்கிறுர்கள் என்ற விவரம் என்னிடத்தில் இல்லே. மீதியுள்ள மனுக்கள் எல்லாம் பல விதமான 'ஸ்டேஜ்'களில், கால கட்டங்களில் கவனிக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக, சில தொழிற்சாலேகளேப் பொறுத்தவரையில் Letters of Intent கொடுத்ததற்குப் பின்னுலே அதிலே கூட மத்திய அரசு தகராறு செய்கிறது. உதாரணமாக, தூத்துக்குடி தொழிற்சாலேயைப் பொறுத்தவரையில், மூலப் பொருள் நாப்தாவா, ஃப்யுல் ஆயிலா என்று மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. Letters of Intent "கொடுத்ததற்குப் பின்னுலே Foreign Collaboration கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா என்று பரிசீலனை செய்கிறது. பல விதமான பிரச்சினைகளால், இந்த மனுக்கள் காலதாமதம் ஆகிறது. அண்மையில், நானும், முதலமைச்சரும், மத்தியத் தொழில் அமைச்சரை கேட்டபோது, கிட்டத்தட்ட 1,000 மனுக்கள் இந்தியா முழுவதற்கும் pending ஆக இருக்கிறது, விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று உறுதி சொல்லி இருக்கிறுர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்ற 69-ம் ஆண்டிலே விண்ணப்பித்துக் கொண்டார்களே, அதிலே பெரிய தொழிற் சாலேக்கு என்று விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர், சிறிய

தொழிற்சாலைக்கு என்று விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்? அதிலே, மத்திய அரசு அனுமதி வழங்கி இருப்பது எத்தனை? மாநில அரசு அனுமதி வழங்கி இருப்பது எத்தனை? மத்திய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இந்தச் சிறிய தொழிற்சாலைக்கு நமது ராஜ்ய சர்க்கார் அனுமதி வழங்குவதிலே வருடக் கணக்கில் தாமதம் ஏற்படுகிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 2–3 பெரிய கேள்விகளாக போட்டார்கள். ஐ. டி. ஆர். ஆக்ட் என்று மத்திய அரசாங்கத்தின் சட்டத்தின் கீழ் மத்திய அரசு தன்னுடைய "லைசென்சு கமிட்டி" மூலம் அனுமதி வழங்குகிறது. அங்கே இந்தக் கால தாமதம் ஏற்படுகிறது. அதிலே, சிறிய தொழிற்சாலை பெரிய தொழிற்சாலை என்று இல்லாமல், இந்தச் சட்டத்திற்கு உட்பட்ட எல்லாத் தொழிற்சாலைகளும் அனுமதி பெற வேண்டும்.

சிறிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், அதற்காக நம்முடைய அரசாங்கம் சிறு தொழிற்சாலைகளுக்கு என்று ஒரு தனி வாரியத்தை அண்மையில் ரூ. 2 கோடி மூலதனம் போட்டு ஆரம்பித்து இருக்கிறோம். நாம் கொடுக்கும் அனுமதியில் கால தாமதம் ஏற்படுவதற்கான காரணம், பஞ்சாயத்து, பாக்டரீஸ் ஆக்ட், எலக்டிரிசிடி போர்ட் என்று பல இலாகாக்களுடன் தொடர்பு கொண்டு செய்ய வேண்டியிருப்பதால் காலதாமதம் ஆகிறது. இந்தக் குறை எடுத்துக்காட்டப்பட்டதற்குப் பின்னாலே, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைமையாகக் கொண்டு, மக்கள் பிரதிநிதிகள், தொழில் அதிபர்கள் கொண்ட குழு செயல்படுகிறது. இதை கனம் அங்கத்தினர் பாராட்டுவார் என எதிர்பார்த்தேன். மறந்து விட்டார் போலும்.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே தொழில்கள் ஆரம்பிப்பதற்கு மூலப் பொருள்கள் மிக முக்கியம். அதற்கு அயல் நாட்டு செலாவணி தேவைப்படுகிறது. இம்மாதிரி இருக்கும் காரியங்களை நிறைவேற்றுவதற்கு "மாநில சுயாட்சி" தேவை என்று தெரிவித்தார்கள். அம்மாதிரியான நிலை ஏற்படும்போது வேறு எந்த அரசாங்கத்தின் துணையும் இல்லாமல், நம்முடைய அரசாங்கமே என்ன செய்ய முடியும் என்று அமைச்சர் நம்புகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் 'மாநில சுயாட்சி'யில் நம்பிக்கை வைத்திருக்கிறாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. நாங்கள் சொல்வதெல்லாம் ஒரு இடத்திலே, அதாவது லைசென்சு கமிட்டியிலே, அதற்கான செக்ரடேரியட்டிலே காலதாமதம் ஏற்படாமல், மாநில முதலமைச்சர்கள் கூடி கூட்டுறவு முறையில் முடிவு செய்வதற்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம்.

மூலப்பொருள்களைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல், தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருள்கள் கிடைக்க

1970 செப்டம்பர் 1]

வில்லை. நம்முடைய நாட்டினரால் இன்டஸ்டிரீஸ் அமைக்க முடிய வில்லை. அதே சமயத்தில் மத்திய அரசாங்கம் ஏராளமான இரும்புக் கனிப்பொருள்களை, கோடிகோடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள். ஆகவே, மாநில சுயாட்சி இருக்குமானால் ஒவ்வொரு மாநிலத்திடனும் நாம் தொடர்பு கொண்டு இந்த தவறுகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எங்களோடு சேர்ந்து கனம் அங்கத்தினர் அவர்களும் வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம்: நமது மாநிலத்தில், பொதுவாக தொழிற் சாலைகள் ஆரம்பிப்பதற்கு மந்த நிலை இருக்கிறது: Private enterprenuers முன் வருவது இல்லை. காரணம், அவர்களுக்கு நாம் கையாளுகிற தொழிற்கொள்கை Labour Policy விரோதமாக இருக்கிறது. இதுவரையில் தி.மு.க. வுக்கு சங்கம் இல்லவே இல்லை. இப்போது, அங்கெல்லாம் போய் போட்டிச் சங்கங்கள் வைப்பதால், குழப்பம் உண்டாகிறது. இதுவரையில், கம்யூனிஸ்டுகள்தான் சங்கம் வைத்து இருந்தார்கள். சங்கங்கள் பிளப்பது அல்லது "கோ-ஸ்லோ" பாலிசி கையாள்வது, தொழிற்சங்கங்களிடையே சண்டை, இவற்றால் தொழிற்சாலைகளில் வேலை கெடுகிறது. இதனால் தான், No enterprenuevcomes forward to sink his hard earned money in the industry. இது அரசாங்கத்திற்குத்தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய கனம் அங்கத் தினர் அவர்கள் பரிதாபப்படுகிறார், அவர்களுடைய கட்சி வளர்ந்த இடத்திலே, தி.மு.க. வளர்ந்து வருகிறதே என்று இப்படி ஆத்திரப் படுவது எனக்கு பரிதாபமாக இருக்கிறது. இந்த அரசாங்கத்தின் கொள்கையை தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒவ்வொரு சங்கம் தான் இருக்க வேண்டும். இது அரசியல் கட்சி சார்பற்ற சங்கமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். அரசியல் கட்சிகள் ஒரு சங்கம் இருக்க வேண்டு மென்று சொல்கிறோம். அரசியல் கட்சிகள் ஒரு சங்கம் இருந்தால் ஒப்புக் கொள்கிறார்களா? கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய சங்கம் இருக்க வேண்டுமென்று சொல்கிறது. சுதந்திராக் கட்சி கூட தங்கள் கட்சி சங்கம் இருக்க வேண்டுமென்று சொல்கிறது. காங்கிரஸ் பிளவுபட்டு இப்போது 2 காங்கிரஸ் ஆகி இருக்கிறது. அவர்களும் சங்கம் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் எப்படி சங்கம் வேண்டாம் என்று சொல்வது?

எதிர்க்கட்சித் தலைவரவர்களும், கொறடா அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் ஒவ்வொரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம்தான், அதிலே அரசியல் இருக்கக்கூடாது என்று முடிவு எடுப்பார்களானால், அதற்கான சட்டத்தை அமுல்படுத்த நாங்கள் தயாராக இருக் கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு தொழிற் சாலைக்கு ஒரு சங்கம் தான் என்ற நிலையை உருவாக்கவேண்டும் என்ற கொள்கையில் தெளிவாக இருக்கிறோம்.

[1970 செப்டம்பர் 1

யாரோ தொழில் அதிபர்கள் தமிழ்நாட்டில் தொழில் ஆரம்பிக்க பயப்படுகிறார்கள் என்று ரகசியமாக அங்கத்தினருக்கு தகவல் அனுப்பி இருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரையில் இந்திய நாட்டிலே எங்கே சென்றாலும், இப்போது தொழில் ஆரம்பிப்பதற்கு இடம் வேண்டுமானால் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சி செய்யும் தமிழ்நாட்டுக்கு செல்லுங்கள் என்று சொல்கிற நிலை இருக்கிறது. நண்பர் வினயகம் மட்டும் இப்படிச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

* 175 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காகிதத் தொழிற்சாலை ஏதேனும் அமைக்கும் உத்தேசம் தற்போது தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் படுகையில் ஏராளமான மூங்கில், வைக்கோல் புல் முதலியவைகள் கிடைப்பதால் இனிமேலாகிலும் அந்தப் பகுதியில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கு இருக்கும் காகித பற்றாக்குறையைப் போக்குவதற்கு புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவேண்டும் என்றும், நம்முடைய தமிழ்நாட்டில் ஒன்று கூடுதலாக தொடங்கவேண்டும் என்றும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய காகிதத் தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தாக வேண்டும் என்றும் நம்முடைய மத்திய அரசு ஆலோசனை கூறியிருக்கிறது. அதற்காக ஒரு குழு அமைத்து என்ன மூலப் பொருள்கள் நம்முடைய நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்து புதிய காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்ற ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டு வருகிறது. அது விரைவிலே முடிவாகும் என்று கருதுகிறேன்.

* 176 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether a barrel and drum fabrication unit is to be set up to assist the Madras Refineries by the State Government ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த பீப்பாய்களை, தொட்டிகளை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையைப் பொறுத்த அளவில் மாநில அரசு ஆரம்பிக்காவிட்டாலும் சரி, தனியாருக்கு அம்மாதிரி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு உரிமம் வழங்கப்படுமா ? மத்திய அரசாங்கம் அதை ஆரம்பிக்க இருக்கிறார்களா ? மாநில அரசு வேறு ஏதாவது உப தொழிற்சாலையை ஆரம்பிப்பதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.